# தகவல் அறியும் உரிமைச் சட்டம் விண்ணப்பம்

அனுப்புர்: தேதி:

(ரூ 10 க்கு கோர்ட்
கட்டண வில்லை ஒட்டும் இடம்)

பெறுநர்:
பொது தகவல் அதிகாரி (தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005)
தாலுக்கா அலுவலகம்,.
......................................... தாலுக்கா.
........................................ பின் கோடு.

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சில தகவல்களைக் கேட்டல்.

------------

நான் தங்கள் அலுவலகத்திற்கு இதர பிற்படுத்தப்பட்டோர் சான்று OTHER BACKWARD CLASSES CERTIFICATE / BC/MBC/ வாரிசு சான்றுகள் / சாதாரண பட்டா மாற்றம் / உட் பிரிவு செய்து பட்டா மாற்றம் / பிறப்பு / இறப்பு சான்று கேட்டு ........................... தேதியில் ...............................பதிவு எண் கொண்ட பதிவு அஞ்ச-ல் விண்ணப்பம் அனுப்பியிருந்தேன். எனக்கு இது நாள் வரை மேற்படி சான்று அளிக்கப்படவில்லை. இது தொடர்பாக எனக்கு பின்வரும் தகவல்களை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

1) அ. மேற்படி கோரிக்கை சார்ந்த எனது விண்ணப்பம் தங்கள் அலுவலகத்திற்கு எந்த தேதியில் கிடைக்கப்பெற்றது? ஆ. மேற்படி விண்ணப்பத்தை வரவு வைத்த தங்கள் அலுவலக பதிவு அஞ்சல் பதிவேட்டில், எனது விண்ணப்பம் பதிவு செய்துள்ள பக்கத்தின் ஒளி நகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்

2) அ. அ. மேற்படி எனது இதர பிற்படுத்தப்பட்டோர் சான்று OTHER BACKWARD CLASSES CERTIFICATE/BC/MBC/ வாரிசு சான்றுகள் / சாதாரண பட்டா மாற்றம் / உட் பிரிவு செய்து பட்டா மாற்றம் / பிறப்பு / இறப்பு சான்று கோரிய எனது விண்ணப்பம் எந்த தேதியில் தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப் பெற்றது? ஆ. மேற்படி எனது கோரிக்கை விண்ணப்பத்திற்கு தங்கள் அலுவலகத்தில் அளிக்கப்பட்ட பகிர்மானப் பதிவேட்டு எண் என்ன என்று தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

3) அ. இதர பிற்படுத்தப்பட்டோர் சான்று OTHER BACKWARD CLASSES CERTIFICATE மற்றும் BC/MBC, வாரிசு சான்றுகள், சாதாரண பட்டா மாற்றம், உட் பிரிவு செய்து பட்டா மாற்றம், பிறப்பு இறப்பு சான்றுகள் குறித்து செய்யும் விண்ணப்பங்கள் தங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெற்ற எத்தனை நாட்களுக்குள் அவை வழங்கப்படவேண்டும் என்று தங்கள் அலுவலக விதிகளின்படி காலக் கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது? ஆ. மேற்படி காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட சுற்றறிக்கையின் ஒளி நகலை அளிக்கவும்.

4) இதர பிற்படுத்தப்பட்டோர் சான்று/BC/MBC/ வாரிசு சான்றுகள் / சாதாரண பட்டா மாற்றம் / உட் பிரிவு செய்து பட்டா மாற்றம் / பிறப்பு / இறப்பு சான்றுக்கு என்னென்ன ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும். என தெரிவிக்கும் ஒளி நகலை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

5) அ. நான் அனுப்பியிருந்த விண்ணப்பத்தில் அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டிருந்ததா? ஆ. இல்லை எனில் அதுபற்றி எனக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதா? இ. ஆம் எனில் அதன் ஒளிநகல் வழங்கவும் ஈ. எந்த தேதியில் கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பப்பட்டது? உ. நான் அல்லது என் பெற்றோர் எந்த தேதியில் விசாரிக்கப்பட்டோம்? ஊ. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் எந்த தேதிகளில் தங்கள் அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்பினார்கள்? என்ற தகவல்களை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

.

6) எனது மேற்படி விண்ணப்பத்தின் மீது மேற்கொண்ட விசாரணைகளைக் காட்டும் விசாரணை ஏடுகளின் ஒளி நகலை மற்றும் விசாரணை அறிக்கைகளின் ஒளிநகலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

7) ஒரு குடும்பத்தின் இருப்பிடத்தையும், சாதியையும்., வருமானத்தையும் அறியும் அலுவலர்கள் தங்கள் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளனரா? அல்லது வேறு அலுவலகத்தில் உள்ளனரா என்று தகவல் அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

8) நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் எனக்கு மேற்படி இதர பிற்படுத்தப்பட்டோர் சான்று/BC/MBC/ வாரிசு சான்றுகள் / சாதாரண பட்டா மாற்றம் / உட் பிரிவு செய்து பட்டா மாற்றம் / பிறப்பு / இறப்பு சான்று அளிக்காமல் இன்றுவரை கால தாமதம் செய்யும் அலுவலரின் அல்லது எனக்கு மேற்படி சான்று அளிக்க பொறுப்பான அலுவலரின் பதவிப் பெயர், விலாசம் ஆகியவற்றை அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

9) அ. தங்கள் அலுவலகத்தில் உள்ள பதிவுகள் படி, இதர பிற்படுத்தப்பட்டோர் சான்று/BC/MBC/ வாரிசு சான்றுகள் / சாதாரண பட்டா மாற்றம் / உட் பிரிவு செய்து பட்டா மாற்றம் / பிறப்பு / இறப்பு சான்று கேட்டும் தங்கள் அலுவலகத்திற்குள் ............................ முதல் ............................... தேதி வரை யார் யார் எந்த எந்த தேதியில் விண்ணப்பித்திருந்தார்கள்? ஆ. அவர்கள் கோரிக்கை மீது இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டது பற்றிய முழு தகவல்களை அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

10) நான் கோரிய இதர பிற்படுத்தப்பட்டோர் சான்று/BC/MBC/ வாரிசு சான்றுகள் / சாதாரண பட்டா மாற்றம் / உட் பிரிவு செய்து பட்டா மாற்றம் / பிறப்பு / இறப்பு சான்று எந்த தேதிக்குள் எனக்கு அளிக்கப்படும் என்ற தகவலை அளிக்க கேட்டுக் கொள்கிறேன்.

11) அ. எனக்கு இது நாள் வரை இதர பிற்படுத்தப்பட்டோர் சான்று/BC/MBC/ வாரிசு சான்றுகள் / சாதாரண பட்டா மாற்றம் / உட் பிரிவு செய்து பட்டா மாற்றம் / பிறப்பு / இறப்பு சான்று அளிக்கப்படாமல் இருப்பதற்கான காரணங்களை எனக்குத் தெரியப்படுத்தியிருந்தீர்களா? ஆ. ஆம் என்றால் அதற்கான ஒளி நகலை எனக்கு தரவும்.

12) அ. பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அரசு ஆணை எண். 114 நாள்: 02-08-2006 ன் ஒளி நகலையும் அளிக்க கேட்டுக் கொள்கிறேன். மேற்படி அரசாணை தங்கள் அலுவலகத்தில் பின்பற்றப்படுகிறதா? ஆ. ஆம் எனில் மேற்படி அரசாணை சார்ந்து எனக்கு பதில் அளிக்காமல் இருந்தமைக்கு ஏதாவது தனிப்பட்ட காரணங்கள் கண்டறியப்பட்டிருந்தால் அவைகளைத் தெரிவிக்கவும்.

13) அ. இலஞ்சம் ஒழிப்பு விழிப்புணர்வு தகவல் பலகையை ஒவ்வொரு அலுவலகத்திலும் வைக்க கடைசியாக பிறப்பிக்கப்பட்ட தமிழக அரசு ஆணையின் ஒளி நகலையும், ஆ. அப்படி தங்கள் அலுவலகத்தில் அந்த தகவல் பலகை வைக்கப்பட்டதற்கு செய்யப்பட்ட செலவைக் காட்டும் செலவு சீட்டின் ( paid voucher copy) ஒளி நகலையும்., இ. அந்தத் தகவல் பலகை தங்கள் அலுவலக பொருட்கள் பதிவேட்டில் எந்த பக்கத்தில் பதிவு செய்யப்பட்டதோ அந்த பக்கத்தின் ஒளி நகலையும் அளிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஈ. அந்த பலகை தங்கள் அலுவலகத்தில் மக்கள் பார்வைக்கு தெரியுமாறு எந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை தெரியப்படுத்தவும்?

14 ) நான் கோரிய தகவல்களை முழமையாக அளிக்காமல் அல்லது தவறான அல்லது பொருத்த மற்ற தகவல் அளித்தால் அப்படி செய்யும் அலுவலருக்கு என்ன என்ன தண்டனையை அளிக்க தகவல் உரிமைச் சட்டத்தின் விதிமுறைகள் கூறுகின்றன என்ற தகவலை கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி தகவல்களைப்பெற இத்துடன் ரூ.10-க்கு நீதிமன்ற வில்லை உட்டியுள்ளேன்.

இப்படிக்கு,

(ஒப்பம்)